WANTED
DTP OPERATOR
FEMALE/MALE
COREL DRAW
PHOTOSHOP
INDESIGN
TAMIL TYPING
89395 26999



# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com
CHROMPET
Weekly News Paper
www.gstroadnews.com
Chrompet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar
Vol:13 Issue -13 06 July 2025 - 12 July 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902



SRI JAYA GANAPATHY BUILDER
INDEPENDENT HOUSE BUILDING
INTERIOR WORK
ONE YEAR FREE WARRANTY
எங்களிடம் சிறந்த முறையில் வீடு கட்டி தரப்படும்
97872 56503

VILLA PLOTS FOR SALE
@ PADAPPAI ,NEAR BUS STAND

RERA& DTCP APPROVED
PLOTS STARTS 752 SQFT TO 1800 SQFT
ACTUAL PRICE 4200
OFFER PRICE 3900 PER SQFT
P.S.FOUNDATIONS
95973 83526 / 98401 55139

ACTIV ONE
ஆக்டிவ் ஒன்இன் பவர்
அனைவருக்கும்
ADITYA BIRLA CAPITAL
HEALTH INSURANCE
மருத்துவ காப்பீட்டு நிறுவனத்தின் மிகப்பெரிய சலுகை
100% வரை நீங்கள் செலுத்திய வருடாந்திர பணம் (Annual Premium) திரும்ப பெறும் வாய்ப்பு
காப்பீட்டின் முதல் நாளிலிருந்தே ஆஸ்துமா, இரத்த அழுத்தம், கொலஸ்டரால், சர்க்கரைநோய், தைராய்டு, உடல்பருமன், இருதய ஸ்டண்ட்டுக்கான சிகிச்சை பெறலாம்
காப்பீடு தொகை 100% வருடாந்திர அதிகரிப்புடன் அடிப்படை காப்பீடு தொகையின் 500% வரை கிரெடிட்கவரேஜ்
மருத்துவ சிகிச்சை முன் 90 நாட்களிலிருந்து, சிகிச்சைக்குபின் 180 நாட்கள் வரை ஆகும் அனைத்து செலவுகளும் திரும்பபெறும் அரிய வாய்ப்பு
கையுறைகள், காட்டன், முககவசங்கள் போன்றவற்றிக்கு 100% பணம் திரும்பபெறும் வாய்ப்பு
தனிப்பட்ட விபத்து காப்பீடு ஒரு நாளைக்கு ரூ.12ல் இருந்து தொடங்குகிறது
இலவச ஆலோசனைக்கு தொடர்புகொள்ளவும்: 90031 56625 / 97907 58518

WANTED
SITE ENGINEER
FRESHER / EXPERIENCE
FOR BUILDER OFFICE
SRI DEVI BUILDER
EAST TAMBARAM
95000 76091/ 96771 14444

3 BHK INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ CHROMPET
Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School

3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged
MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004

FLATS FOR SALE @ CHROMPET
THIRUMALAI NAGAR
NISHAN APARTMENT

5th STREET NR. ZION SCHOOL
2 BHK 960 Sqft
3 BHK 1200 Sqft
Lift/CCP/CCTV/ VIDEO DOOR PHONE
AS PER VASTHU / 24 HRS WATER
NISHAN CONSTRUCTION 98409 84126

FLATS FOR SALE
@ CHROMPET

Tirumalai Nagar Extn
Near Zion School
2 BHK 2 UNITS ONLY AVAILABLE
1033 & 1044 Sqft
CCTV, Covered Car Parking, Lift, Asper Vaasthu

FLATS FOR SALE
@ CHROMPET

HASTHINAPURAM
MAGESHWARI NAGAR
2 BHK 998 Sqft & 861 Sqft
2 UNITS ONLY AVAILABLE
NITHISH DEVELOPERS
94458 11749 / 92062 59999
Email: nithishdevelopers@gmail.com

FLATS FOR SALE
@ CHROMPET
Nr.VAISHNAVA COLLEGE

3 BHK - 1080 Sqft
3 UNITS
ONE FLAT ONE FLOOR
CCP- LIFT-AS PER VASTHU
Rs- 8999 Per sq.ft.
MR CONSTRUCTION
90035 29020
95000 35454

PREMIUM 2 & 3 BHK FLATS
@ CHROMPET- RADHA NAGAR
READY TO OCCUPY

2 BHK-992-Sqft / 3 BHK-1116-Sqft
LIFT FACILITY / CCP / AS PER VAASTHU
VRM BUILDERS
98400 34209 / 98408 53756

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
PADMANABHA NAGAR
(Near KARUMARI AMMAN TEMPLE)

NEW Projects
4BHK 1825Sft
2BHK 941 & 898Sft
Sankar Constructions
98416 59929 / 98416 59930
BASHYAM NAGAR
Nr.ABIRAMI KALYANA MANDAPAM

NEW Projects
3BHK 1132Sqft
2BHK 1028Sqft
24 Hrs Power Backup*
Specification
AUTOMATIC LIFT
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER

# திருச்செந்தூரில் முருகன் வந்த வரலாறு!

திருவனந்தபுரத்தில் மார்த்தாண்ட மகாராஜா அரசாண்ட சமயம்.

திருச்செந்தூர் திரிசுதந்திர முக்காணி பிராமணர்களுக்கும், திருவனந்தபுரம் முக்காணி பிராமணர்களுக்கும் பெண் கொடுக்கல்

வாங்கல் சம்பந்தம் உண்டு. இன்று வரை உண்டு.

அந்நாளில் ஒரு சமயம் திருவனந்தபுரத்தில் திருசுதந்திரர்கள் சண்முகரை அங்கு கண்டனர். உடனே இதை எப்படியாவது நம் திருச்செந்தூர் செந்திலாதிபன் ஆலயத்திற்க்கு எடுத்து வந்து உற்சவமூர்த்தியாக ஆக்க வேண்டும் என்று இறைவனின் அசரிரீயாக விரும்பினர். உடனே காரியத்தில் இறங்கினர்.

திருவனந்தபுரத்தில் வியாபாரத்தில் மிகவும் செல்வாக்கு பெற்ற சமுதாயம் பரக்க செட்டிமார் சமுதாயம். திருசுதந்திரர்கள் பரக்க செட்டிமார் உதவியை நாடினார்கள். அவர்கள் மகிழ்வுடன் உதவ முன் வந்தனர்.

ஓர் இரவு சண்முகரின் விருப்பதிற்கிணங்க முருகரை எடுத்து இரவோடு இரவாக ஒரு மூங்கில் கம்பில் துணியை கட்டி ஊஞ்சல் பல்லக்கு செய்து அதில் சண்முகரை கிடத்தி, துணியை வைத்து மூடி திருச்செந்திலம்பதி எனும் திருச்செந்தூரை நோக்கி புறப்படலாயினர்.

வழியில் திரிசுதந்திர்களையும், பரக்க செட்டிமார்களையும் திருவிதாங்கூர் சுங்கச்சாவடியில் காவலர்கள் தடுத்தனர். அவர்களிடம் குழந்தைக்கு அம்மை போட்டு இருக்கிறது, அதனால் பாண்டிய நாட்டுக்கு வைத்தியம் பாக்க கொண்டு போகிறோம் என்று சொல்கின்றனர்.

காவலர்கள் அம்மை என்ற உடன் திறந்து பார்க்க கூட அச்சப்பட்டு அந்த கூட்டத்தை விரைவில் கடத்தி விடுகின்றனர். மேலும் விரைவாக நடக்கலாயினர் இரு குழுமினரும்.

அதற்குள் சிலையை காணவில்லை என்று திருவனந்தபுரத்தில் மார்த்தாண்ட மகாராஜா அரண்மனையில் ஒரே களேபரம். மார்த்தாண்ட மகாராஜா கடும் கோபம் ஆகிறார். நாலாபுறமும் தேட ஆணை பிறப்பிகிறார்.

அன்று இரவு மகாராஜா கனவில் சண்முகர் வந்து "என் குழந்தைகள் என்னை சரியான இடத்திற்கு அழைத்து செல்கிறார்கள். அதுவே என் ஆசை. நீ பதட்டப்பட வேண்டாம். என்னைக் காண இனி திருச்செந்தூர் வா" என்று கட்டளை இடுகிறார் முருகப்பெருமான்.

சண்முகரை சுமந்து செல்லும் அடியவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரும் பொழுது விடிந்து விடுகிறது. அந்த இடத்தில் சண்முகருக்கு ஜல அபிஷேகம் செய்து சண்முகருக்கு பசிக்குமே; நிவேதனம் செய்ய ஏதாவது கிடைக்குமா என்று தேடுகிறார்கள்.

அது ஒரு கடற்கரை ஒட்டிய வனாந்திர காடு. அங்கு ஒரு குடிசையில் ஒரு வயதான பெண் வாழ்ந்து வருகிறாள். காலை உணவு தயாரிக்க புளித்த மாவும், பயறு கஞ்சியும் வைத்து இருக்கிறாள் அப்பெண்.

உடனே இந்த சண்முகரின் அடியவர் கூட்டம் அந்த பெண்மணியிடம் வேண்டி

சண்முகருக்கு புளித்த தோசையும், கஞ்சியும் நிவேதமாக வைத்து பூஜை செய்கிறார்கள்.

அந்த நிவேதனம்தான் உதயமார்தாண்ட கட்டளையில் இன்று வரை ஒரு நாள் முன்பே அரைத்த புளித்த தோசை, பயறுகஞ்சி என "சண்முக நிவேதனம்".

அந்த அம்மைத் தழும்புதான் இன்னும் உற்சவர் சண்முகர் முகத்தில் உள்ளது.

பின்னர் சண்முகர் சிலைகளும், நடராஜர் சிலைகளும்தான் தங்கம் என எண்ணி டச்சுக்கார மேசானிய திருடன்களால் திருடப்பட்டது. அதே போல் இந்த சண்முகர் சிலையையும் திருடிச் சென்று விட்டனர். ஊரே பதைபதைத்தது.

பின்னர் அது தங்கம் இல்லை. ஐம்பொன் என அறிந்து டச்சுத் திருடன்கள் தாங்கள் திருடிய அச்சிலைகளை கடலிலேயே போட்டு விட்டு சென்றனர்.

திருமலை சவுரி அய்யலுகாரு என்பவன் திருமலை நாயக்கர் என்ற பெயரில் மதுரையே ஆண்டு வந்தான். இவன் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது மகனாக கி.பி.1584 ல் பிறந்தான். கி.பி. 1623 ல் தனது 39 வது வயதில் மதுரை மன்னனாக முடி சூட்டிக் கொண்ட இவன் திருச்சியே அரசிருக்கையாக்கிக் கொண்டு 11ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தான். அது சமயம் திருச்சி அருகே உள்ள காவனுரில் கார்காத்த வேளாண் மரபில் வந்த வீர இளைஞன் பெரிய வடமலையப்ப பிள்ளை என்பவரை திருநெல்வேலியின் கவர்னராக,அதாவது தனது பிரதிநிதியாக கி.பி. 1630 ல் நியமித்தார்.

இந்நிலையில் 16ம் நூற்றாண்டு திருநெல்வேலி ஆட்சியாளன் வீர பாண்டியன் தன் மகள் மாணாடுவை காயாமொழி ஆதித்தன் என்பாருக்கு மணம் முடித்துக் கொடுத்தான். சீதனமாக வீரபாண்டிய பட்டமும் வழங்கினார்.

இந்த வடமலையப்பர் பிள்ளை கனவில் முருகப்பெருமான், தான் கடலில் இருப்பதாக சொல்ல வடமலையப்ப பிள்ளை காயாமொழி ஆதித்தனிடம் சென்று முறையிட்டார். காயாமொழி ஆதித்தன் மீனவர்களை அழைத்துக் கொண்டு கடலுக்கு சென்ற போது கடலின் மேலே மிதக்கும் ஒரு எலுமிச்சம்பழத்தை கண்டு அதற்கு கீழே போய் பார்க்க உத்தரவிட்டார்.

என்ன ஆச்சரியம்!. முருகப்பெருமான், நடராஜர் சிலைகள் அனைத்தும் கடலினுள் இருந்தன. அவைகளை அப்படியே கடலில் இருந்து மீட்கப்பட்டு மீண்டும் திருச்செந்தூர் கோயிலில் பிரதிஷ்டை



செய்யப்பட்டன.

இந்த சம்பவம்தான் காயாமொழி ஆதித்தன் மனதில் முருகப்பெருமான் மீது தீராத பாசத்தை ஏற்படுத்தியது.

பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகப்பெருமானை வேண்டிக் கொண்டு ஆதித்தமார்கள் நிலத்தில் எள் மானாவாரியாக விதைக்கப்பட்டது. என்ன ஒரு ஆச்சரியம்!. ஒரு பங்கு கிடைக்கும் இடத்தில் 3பங்கு எள் மகசூல் கிடைத்தது. அந்த பணத்தை வைத்தே காயாமொழி ஆதித்தர்கள் திருச்செந்தூர் கோயிலுக்கு தேர்கள் செய்து கோயிலுக்கு உபயமாக கொடுத்தனர்.

இச்சம்பவங்கள் அனைத்திற்கும் வித்திட்ட முக்காணி திரிசுதந்திர்கள் முருக பெருமானின் பேரன்புக்கு பாத்திரமானவர்கள் என்பதில் எள் அளவும் சந்தேகம் இல்லை. அதனால்தான் தில்லை மூவாயிரம் தீட்சிதர்கள், திருச்செந்தில் ஈராயிரம் முக்காணியர்கள் என்ற மரபு இன்றும் தொடர்ந்து வருகிறது.

முருகப்பெருமானை நம்பி அபயக் குரலோடு வரும் பாமரனையும் தரிசிக்க வைக்கும் கடமை, பொறுப்பு இங்கு உள்ள அத்தனை பாரம்பரிய அர்ச்சக பெருமக்களுக்கும் உண்டு.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்க்க தன் பிள்ளை தானே வளரும் என்பது திருச்செந்தூரானின் உபதேசம்.

ஆக முருகர் எந்த ரூபத்தில் யாரோடு, எப்போது, எப்படி நட்பு பாராட்டுவார் என்று நம்மால் கூற முடியாது. அது அவர் மனதிற்கு மட்டுமே புரிந்த ரகசியம்.

# ஆனி மாத பௌர்ணமி

ஒவ்வொரு மாதங்களிலும் வரும் பௌர்ணமி மிகவும் முக்கியமான வழிபாட்டு நாளாகும். இருந்தாலும் கார்த்திகை, தை, சித்திரை உள்ளிட்ட சில மாதங்களில் வரும் பௌர்ணமியை மட்டும் தான் நாம் முக்கியமானதாக கருதி வழிபடுகிறோம். அந்த வரிசையில் ஆனி மாதத்தில் வரும் பௌர்ணமியும் மிகவும் முக்கியமானதாகும். ஆனி மாதம் என்பது தட்சிணாயன காலத்தின் கடைசி மாதம் என்பதால் இந்த மாதத்திலண் வரும் பௌர்ணமியும் தட்சிணாயன காலத்தில் வரும் கடைசி பௌர்ணமி என்பதால் சிவ பெருமான், விநாயகர், துர்க்கை அம்மன் ஆகியோரை வழிபட மிகவும் சிறப்பானதாகும்.

பௌர்ணமியில் குல தெய்வத்தை வழிபடுவதும், சந்திரனை வழிபடுவதும் மிகவும் சிறப்பானதாகும். இந்த நாளில் சிவ பெருமானுக்கு அபிஷேகம் செய்து, வாசனை மலர்களால் அர்ச்சனை செய்து வழிபடுவது சிறப்பு. அதோடு மாலை 6 மணிக்கு பிறகு ஒரு குறிப்பிட்ட முறையில் விளக்கேற்றி வழிபடுவதால் நாம் கேட்ட வரங்கள் எதுவாக இருந்தாலும் கிடைக்கும்.

விளக்கு வழிபாடு :

இந்த விளக்கினை ஏற்றுவதற்கு மூன்று பொருட்கள் மட்டும் இருந்தால் போதும். அகல் விளக்கு, வெள்ளை சர்க்கரை மற்றும் வெள்ளை மொச்சை ஆகியன. பௌர்ணமி என்பது சந்திரனுக்குரிய நாளாகும். சந்திரனுக்குரிய நிறமும், சுக்கிரனுக்குரிய நிறமும் வெள்ளையாகும். அதனால் வெள்ளை நிற சர்க்கரையை கைபிடி அளவிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.



விளக்கேற்றும் முறை :

ஆனி பௌளர்ணமி அன்று மாலை 6 மணிக்கு பிறகு ஒரு தட்டில் ஒரு புறம் வெள்ளை மொச்சையையும், மற்றொரு புறம் வெள்ளை சர்க்கரையையும் பரப்பி வைக்க வேண்டும். இவற்றிற்கு இடையே அகல் விளக்கில் நெய் விட்டு, பூஜை அறையில் விளக்கேற்ற வேண்டும். பிறகு இந்த விளக்கை எடுத்து கொண்டு வீட்டு வாசல் அல்லது மொட்டை மாடிக்கு சென்று அங்கு தெரியும் சந்திரனுக்கு காட்டி, "ஓம் சந்திர மௌலீஸ்வராய நமஹ" என்ற மந்திரத்தை மூன்று முறை சொல்லி வழிபட வேண்டும். பிறகு அந்த விளக்கை மீண்டும் பூஜை அறைக்கு எடுத்து வந்து வைத்து, அது தானாக குளிரும் வரை எரிய விட வேண்டும். அடுத்த நாள் வெள்ளை சர்க்கரை மற்றும் வெள்ளை மொட்சையை கால் படாத இடத்தில் கொட்டி விட வேண்டும்.

கேட்ட வரங்கள் கிடைக்க :

இந்த வழிபாட்டினை மேற்கொள்ளும் போது சிவ பெருமானையும், மகாலட்சுமியையும், சந்திரனையும் மனதார நினைத்து வேண்டிக் கொள்ள வேண்டும். இப்படி விளக்கேற்றி வழிபடுவதால் சிவ பெருமானின் அருளும், மகாலட்சுமி, சுக்கிர பகவான் மற்றும் சந்திரனின் அருளும் கிடைக்கும். மனம் குளிர இப்படி வழிபட்டால் கேட்ட வரங்கள் நிச்சயம் கிடைக்கும்.

GST ROAD NEWS
FOR ADVERTISMENT
DETAILS CONTACT
89395 26999 / 044-22236399


# CLASSIFIEDS

**FLAT RENTAL**

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2BHK
PURE VEG
8072230451

**FLAT RESALE**

FLAT FOR RESALE
@CHROMPET
BHARATHIPURAM
2 BHK - 1150 Sqft
UDS - 661 Sqft
NORTH FACING / FIRST FLOOR / WITH CARPARKING
80722 30451

**BUILDING CONTRACT**

KR HOMES
Home Construction @ 2400/- Sq.Ft.,
INCLUDING OHT & SEPTIC TANK
ELEVATION WORK
ARCHITECTURAL DESIGN
ENGINEER SUPERVISION
BRANDED MATERIALS
8072499969

FLAT FOR RESALE
@NEHRU NAGAR
2 BHK - 650 Sqft
UDS - 327 Sqft
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS -412 Sqft 1ST FLOOR
80722 30451

**INDEPENDENT HOUSE**

INDEPENDENT HOUSE FOR SALE
@ CHROMPET, NEMILICHERRY
2000 Sqft,
EAST FACING, GF / FF
2 CAR PARKING SPACE AVAILABLE
SOLAR POWER INSTALLED 1.70 CR
95001 96316

FLAT FOR RESALE
@SEMBAKKAM
Nr. ALPHA MAT.SCHOOL & VV MART
2/3 BHK-OCP-FF
6383 461083

INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ MUDICHUR
MAHALAKSHMI NAGAR
3BHK 1500 Sft
EAST FACING / 24 HOURS WATER
RS. 46 LAKHS
9940016739

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 300/- (Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.



# வெற்றிலை மாலை கட்டும் முறை



வெற்றிலை மாலை கட்டும்போது ஒற்றை படை எண்ணிக்கையிலேயே கட்ட வேண்டும். முதலில் இரண்டு வெற்றிலைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அவற்றின் காம்பு பகுதி யை கிள்ளி விட்டு, வெற்றிலையின் நடுவில் பாக்கு வைத்து கட்ட வேண்டும். கொட்டை பாக்கு, சுருள் பாக்காக இருந்தால் இரண்டு என்ற எண்ணிக்கையில் வைக்க வேண்டும். அது கிடைக்கவில்லை என்றால் பாக்கு தூள் அல்லது சீவல் சிறிதளவு வைத்து மடித்து, அவற்றை மாலையாக தொடுக்க வேண்டும். வெறும் வெற்றிலையாகவோ அல்லது ஒரு வெற்றிலையை வைத்தோ மாலை கட்டி போடக் கூடாது.

# பிரதோஷ காலத்தில் பிரதட்சணம் செய்யும் முறை:

பிரதோஷ பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்கள் சிவபெருமானை வணங்கும் முறையைப் பற்றி கடண்பவன புராணத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:




பிரதோஷ தினத்தில் நந்தியை தரிசனம் செய்து அங்கு நின்று சிவனை வணங்கி, இடப்புறமாக சென்று சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்ய வேண்டும். (உங்களுக்கு வலது புறம்). பின்னர் மீண்டும் சண்டிகேஸ்வர் உள்ள இடத்திலிருந்து வலசென்று கோமுகி எனப்படும் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யப்படும் நீர் வெளியே வரும் துவார வழியே தரிசனம் செய்து, அங்கு நின்று இடப்புறமாக சென்று சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்ய வேண்டும். மீண்டும் அதே போல் மீண்டும் கோமுகிக்கு சென்றூ தரிசனம் செய்து பின் சண்டிகேஸ்வரர் உள்ள சன்னதிக்கு வந்து தரிசனம் செய்ய வேண்டும். மீண்டும் இதே போல் செய்ய வேண்டும்.

கடைசியில் நந்தியை தரிசனம் செய்த பின்னர் சிவ பெருமானை தரிசனம் செய்ய வேண்டும்.



மு.க. ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 52 கோடி ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இதனைத்தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி மண்டலம்3, வார்டு 44க்குட்பட்ட ராமகிருஷ்ணாபுரம் பகுதியில் புதிதாக கட்டப்பட்ட நகர்ப்புற நலவாழ்வு மையத்தை மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன், மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். உடன் மாமன்ற உறுப்பினர் ராஜா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



குரோம்பேட்டை புருஷோத்தமன் நகர் ஸ்ரீ விஜய கணபதி ஸ்ரீ லட்சுமி நாராயண பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சத்குரு சம்கார மகா மந்திர யாகம் விமர்சை யாக நடைபெற்றது திரளான பக்தர்கள் காலை முதல் அபி ஷேகம் மற்றும் ஹோம பூஜை களில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் சிறப்பு ஹோமத்தை பாதூர் எஸ்.ராஜா என்ற சோமாஸ்கந்த சிவாச்சாரியார் ஆலய குருக் கள் சிவக்குமார் மற்றும் சிவாச் சாரியார்கள் இணைந்து சிறப் பாக செய்திருந்தார் விழாவில் கலந்து கொண்ட அனைவருக் கும் ஆலய நிர்வாகம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது

## ஜிஎஸ்டி வரி குறைகிறது

நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) குறைப்பு மூலம் மற்றொரு நிவாரணத்தை வழங்க மத்திய அரசு தயாராகி வருகிறது.

அதன்படி 12 சதவீத வரி அடுக்கை முற்றிலுமாக நீக்கு வது அல்லது தற்போது 12 சதவீத வரி விதிப்புக்கு ஆளாகும் பல பொருட்களை 5 சதவீதத்துக்கு கீழ் மறுவகைப்படுத்துவது குறித்து மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

இந்த மறுசீரமைப்பு நடுத்தர மக்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு பெரிதும் பலனளிக்கும்.

குறிப்பாக, பற்பசை, பல் பொடி, குடைகள், தையல் இயந்திரங்கள், பிரஷர் குக்கர் கள், சமையலறை பாத்திரங்கள், அயன்பாக்ஸ், கீசர், சலவை இயந்திரங்கள், சைக்கிள்கள், ரூ.1,000 விலை கொண்ட ஆயத்த ஆடைகள், ரூ.500 முதல் ரூ.1,000 வரை விலை கொண்ட காலணிகள், எழுது பொருட்கள், தடுப்பூசிகள், பீங்கான் ஓடுகள் மற்றும் விவசாய கருவிகள் போன்றவற்றின் விலை குறைய வாய்ப்புள்ளது

## அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி இசட் பிளஸ் பாதுகாப்பு

பிரதமருக்கு அடுத்தபடியாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு உயர் ரக பாதுகாப்பு.

இசட்பிளஸ்பாதுகாப்பில் 12 கமாண்டோ படை வீரர்கள், 52 காவலர்கள் இடம் பெறுவார்கள்.

எடப்பாடி பழனிச்சாமி வீட்டுக்கு அடிக்கடி வரும் வெடிகுண்டு மிரட்டல் எதிரொலியாக இசட் பிளஸ் பாதுகாப்பு மத்திய உள்துறை அமைச்சகம் வழங்கி உத்தரவு.

## மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் 9 ஆயிரம் பேர் பணி நீக்கம்

கணினி தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசாப்ட், இந்த ஆண்டில் 4வது முறையாக மீண்டும் ஊழியர்கள் பணிநீக்க நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளது. நேற்று ஏராளமானவர்களுக்கு பணி நீக்க நோட்டீசுகளை அனுப்பத்தொடங்கியது. எவ்வளவு பேர் பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள் என்று அந்த நிறுவனம் வெளிப்படையாக அறிவிக்கவில்லை.முன்னதாக கடந்த ஜனவரி மாதம் ஒரு சதவீதஊழியர்களை பணிநீக்கம் செய்தது. கடந்த மே மாதத்தில் மேலும் 6 ஆயிரம்பேரும், கடந்த ஜூன் மாதம் 305 பேரும் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.இந்த நிலையில் நேற்று மீண்டும் வெளியான பணிநீக்க அறிவிப்புகள் அதன் ஊழியர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. புளூம்பெர்க் நிறுவன அறிக்கையின்படி இந்த முறைமைக்ரோசாப்ட் நிறுவனத்தில் 9 ஆயிரம் பேர் பணி நீக்கம் செய்யப்படலாம் என்று தெரியவருகிறது.

## 7 ந்தேதி பத்திரப் பதிவுக்கு கூடுதல் டோக்கன்

சுபமுகூர்த்த நாள் என்பதால், ஜூலை 7இல் பத்திரப் பதிவுக்கு கூடுதல் டோக்கன் ஒதுக்கீடு. செய்யப்பட்டு உள்ளது.

1 சார் பதிவாளர் அலுவலகத்துக்கு 150 முன்பதிவு டோக்கன்கள்.2 சார் பதிவாளர் ஒதுக்கப் படுகின்றன.அதிக அளவு பத்திரப் பதிவு நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு, 150 முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என பத்திரப் பதிவுத் துறை. தெரிவித்து உள்ளது.

## கேரளாவில் மீண்டும் நிபா வைரஸ் பரவல்

கேரளாவின் கோழிக்கோடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களில் கடந்த 2018 மே மாதத்தில் நிபா வைரஸ் காய்ச்சல் பரவியது.

இந்நிலையில் மலப்புரம் மற்றும் பாலக்காடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் வழக்கமான பரிசோதனையின்போது 2 பேருக்கு நிபா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்பட்டன. இதையடுத்து இவர்களின் ரத்த மாதிரிகள் உடனடியாக புனேயில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. நிபா வைரஸ் பரிசோதனைக்காக மாவட்டம் தோறும் 26 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன

## ரம்புட்டான் பழம் சாப்பிட்ட சிறுவன் பலி

மேலப்பாளையத்தை சேர்ந்தவர் நிஜாம் என்பவரது 5 வயது மகனுக்கு நேற்றிரவு அவனது தாத்தா ரம்புட்டான் பழத்தை வாங்கிகொடுத்தார்.பழத்தை விழுங்கிய சிறுவன் சிறிது நேரத்தில் அதன் விதை கழுத்தில் சிக்கி மூச்சு திணறல் ஏற்பட்டு பலியானான்,

## இளம் வயதிலேயே நரையால் வேதனையா... சில இயற்கை வழிமுறை உங்களுக்காக!!!



முடி உதிர்தல், இளநரை, பொடுகு அரிப்பு, பேன் தொல்லை, சொட்டை எனக் கூந்தலைப் பாதிக்கும் பிரச்சினைகள் ஏராளம். கூந்தல் பிரச்சினைகள் சிலவற்றை எதிர்கொள்ள ஆலோசனைகள் உங்களுக்காக.

கூந்தல் உதிர்வு: தேங்காய் பாலைத் தலையில் அரை மணி நேரம் ஊற வைத்துக் குளித்தால் முடி உதிர்வது நிற்கும். வாரம் ஒரு முறை இப்படியாக முடி உதிர்வது நிற்கிற வரை செய்ய வேண்டும். அதிமதுரத்தை இடித்து எருமைப்பால் விட்டு நன்றாக அரைத்து தலையில் தேய்த்து வந்தாலும் குணம் தெரியும்.

இளநரை நீங்க: நாட்டு மருந்துக் கடைகளில் வேம்பாளம் பட்டை என்று கிடைக்கும். அதை வாங்கிப் பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தடவி வரலாம். நெல்லி முள்ளியுடன், கரிசலாங்கண்ணி, அதிமதுரம் ஆகியவற்றை சம அளவு எடுத்துச் சேர்த்து, அரைத்து தலையில் தேய்த்து ஊறவைத்துக் குளித்து வரலாம்.

கடுக்காய்க்கு நரையை அகற்றிக் கருமையாக்கும் தன்மை உண்டு. கரிசலாங்கண்ணிச் சாற்றையும், கடுக்காய் ஊறிய தண்ணீரையும் கலந்து தலையில் தேய்த்துச் சிறிது நேரம் ஊறியதும் குளிக்க வேண்டும். சீரகம், வெந்தயம், வால் மிளகு, ஆகியவற்றை சம அளவு எடுத்துப் பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தலைக்குத் தடவி வந்தாலும் குணம் தெரியும்.


## ருசியான முறையில் பாகற்காய் பொடிமாஸ்



ருசியான முறையில் பாகற்காய் பொடிமாஸ் செய்து பாருங்கள். சாப்பிடாதவர்கள் கூட விரும்பி சாப்பிடுவார்கள்.

**தேவையான பொருட்கள்:** பாகற்காய்1/2 கிலோ,வெங்காயம் நறுக்கியது 2, உப்பு தேவையான அளவு, தாளிக்க: கடுகு 1/2டீஸ்பூன், உளுந்து 2 டீஸ்பூன், சீரகம் 2 டீஸ்பூன், கடலை பருப்பு 2 டீஸ்பூன், கருவேப்பிலை கொஞ்சம், பெருங்காயத்தூள் 1/2 ஸ்பூன், வரமிளகாய் 2

**செய்முறை:** முதலில் பாகற்காயை நன்கு தண்ணீரில் கழுவி சுத்தம் செய்து வட்ட வட்டமாக நறுக்கிக்கொள்ளவும். நடுவில் உள்ள விதைகளை நீக்கவும். அடுத்து ஒரு பாத்திரத்தில் சேர்த்து தண்ணீர் தெளித்து கொஞ்சம் உப்பு சேர்த்து மூடி போட்டு வேக விடவும். அடுத்து பாகற்காய் சுருகியதும் ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு சேர்த்து பொரிந்ததும் உளுத்தப்பருப்பு, கடலை பருப்பு, சீரகம், கருவேப்பிலை, மற்றும் வர மிளகாய் சேர்த்து நன்கு வதக்கவும். பிறகு நறுக்கிய வெங்காயம், பெருங்காய பொடி, சேர்த்து பொன்னிறமாக வதக்கவும். வதங்கியதும் வேக வைத்த பாகற்காய் சேர்த்து அத்துடன் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்கு சுருள வதக்கவும். பாகற்காய் வெந்ததும் அடுப்பை நிறுத்தவும்.





WANTED SUPERVISIOR @CHROMPET
AGE : BELOW 25 YEARS
MALE ONLY
+2 / DEGREE / DIPLOMA
COMPUTER KNOWLEDGE
SALARY RS.14000/ + ALLOWANCES
98416 54214
91718 09600

FAB DIVA FASHIONS
AARI EMBROIDERY CLASSES
BASIC AARI CLASSES FEES RS. 750
10CLASSES DURATION - 1 MONTH
ADVANCED AARI CLASSES FEES RS. 1000/Per Month
No Of CLASSES - 60 Duration
6 MONTHS ONLINE / OFFLINE CLASSES
CUSTOMISED CLASSES AVAILABLE
PICKYOUR OWN DURATION AND LEARNING MODULES AT JUST RS. 750 PER MONTH
9444797685

WANTED @CHROMPET
FEMALE STAFF
QUALIFICATION
ANY DEGREE
SURIYA ORTHO PHYSIO CLINIC
2/4 B, SCHOOL STREET,RADHA NAGAR
98417 17071
98416 71610

BUYING / SELLING
BUYING / SPOT CASH
WORKING AND NOT WORKING
A/C, BRASS,STAINLESS STEEL, FRIDGE, OLD COMPUTER, LAPTOP, UPS, BATTERIES, MUSIC SYSTEM, WATER HEATER, GYM ITEMS, WOODEN FURNITURE, SOFA SET, COT, BEURO, DINING SET, DRESSING & OFFICE TABLE, OLD ALUMINIUM
ALL A TO Z SCRAPS
SRIRAM TRADERS
94441 33979

RAAJ INSTITUTE
B.E., B.Com., M.B.A., Diploma
School Tuition for 6th to 12th
8th Pass Directly Join 10th
10th Pass Directly Join +2
STATE / NIOS / CBSE
Spoken English & Hindi
Tally,MS Office,C,C++
No.75, Station Road, Radha Nagar, Chrompet
90032 67050

5 Years Service Warranty
CHROMPET
24 x 7
CUSTOMER SERVICE
A/C, FRIDGE, TV
WASHINE MACHINE
MICRO OVEN
LG IFB Whirlpool SAMSUNG
No Visiting Charges
9710351039
FACTORY TRAINED ENGINEERS


NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street, Hasthinapuram, Chennai - 600 064.


PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

WANTED
Marketing Executive
GST ROAD NEWS
வார பத்திரிகை அலுவலகத்திற்கு
விளம்பரம் சேகரிக்க ஆட்கள் தேவை
+2 OR DEGREE TWO WHEELER MUST. SALARY - RS.20,000/-
AGE 18-40 Experience / Fresher
8939526999



குரோம்பேட்டை ராதா நகரில் உள்ள பார்வையற்றோர் நல அறக்கட்டளை சார்பாக பார்வையற்ற 200 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தனது பிறந்த நாளை முன்னிட்டு இந்நிகழ்வில் கலந்துகொண்டு 200 பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் ம.தி.மு.க செங்கல்பட்டு மாவட்ட துணை தலைவர் குரோம்பேட்டை ஏ. நாசர் 26.வது வார்டு மாமன்ற உறுப்பினர் புசிரா பானு நாசர் கலந்து கொண்டனர் மற்றும் பேட்சன் பில்டர் உரிமையாளர் க.ஆன்டோ மதிவாணன்,26.வது வார்டு ம.தி.மு.க வட்ட செயலாளர் டி.கரன்சிங் தனது பிறந்த நாளை முன்னிட்டு குடும்பத்துடன் கலந்து கொண்டு நல திட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நிறுவனர் ஏ. கணேசன், சி. பரம தயாளன் பி. சுந்தரம், அன்புச்செல்வன் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட பார்வையற்றோர் கலந்து கொண்டனர் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை சமூக ஆர்வலர் குரோம்பேட்டை ஏ. கணேசன் சிறப்பாக செய்திருந்தார்.




குரோம்பேட்டை சாஸ்தா மஹாலில் நடைபெற்ற மெட்ராஸ் அஸ்தினாபுரம் அரிமா சங்கத்தினர் நடத்திய விழாவில் சங்கத்தின் செயலாளராக சங்கர் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தின் உரிமையாளர் கே.எச். சங்கரநாராயணன் நியமிக்கப்பட்டார். தலைவராக பிரம்மநாயகம்,பொருளாளராக ஜெயகுமார் ஆகியோரும் பதவி ஏற்றனர். மாவட்ட அரிமா ஆளுநர் மணிசேகர் மற்றும் நிர்வாகிகள் நரசிம்மன், ஜெயக்கொடி, சிவகுமார், இ. ராஜமாணிக்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

## அதிமுக சுற்றுப்பயணம்: லோகோ, கட்சிப் பாடலை வெளியிட்டார் இபிஎஸ்




2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் நிலையில், சுற்றுப்பயணத்துக்கான பாடல் மற்றும் லோகோ அதிமுக தலைமை அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.எடப்பாடி பழனிசாமி, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார்.எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரப் பயணம் தொடர்பான லோகோ மற்றும் பாடலை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை கழக அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

## ஓய்வூதியர்களுக்கு வேண்டுகோள்

குரோம்பேட்டை தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்க மாநிலத் தலைவர் இரா நாராயணன். மாநிலச் செயலாளர் சி சுப்பிரமணியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:ஆலந்தூர் பம்மல் சார் கருவூல அலுவலகத்தில் சிலர் வாழ்நாள் சான்று அளிக்கவில்லை என்ற தகவல் நமது சங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளது ஒவ்வொருவரும் தாங்கள் ஓய்வு பெற்ற மாதத்தில் வாழ்நாள் சான்று அளிக்க வேண்டும் அவ்வாறு வழங்காதவர்கள் இந்த மாதத்தில் (ஜூலை) அலுவலக நாளில் காலை 10 மணி முதல் 2 மணிக்குள் சென்று வாழ்நாள் சான்று வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் மேலும் நமது சங்கத்தின் 25 ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் அஸ்தினாபுரம் ராஜேந்திர பிரசாத் சாலையில் உள்ளபி பி ஆர் நல சங்கத்தில் நடைபெறுகிறது. அனைவரும்தவறாமல்கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் .

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

## குடமுழுக்கு விழா: திருச்செந்தூரில் குவியும் பக்தர்கள்

வருகிற ஜூலை ஏழாம் தேதி நடைபெறும் குடமுழுக்கு விழாவையொட்டி திருச்செந்தூரில்.பக்தர்கள் குவிய தொடங்கி விட்டனர். திருப்பதியை மிஞ்சும் பிரமாண்டத்துடன் முருகன் கோவில் ஜொலிக் கிறது. பழமையை மீட்டெடுத்துநவீன வசதிகளுடன் புதுப்பொலிவு எச்.சி.எல் அதிபர் சிவநாடார். அளித்த 200 கோடி நன்கொடையாலும் அரசு மற்றும் அறநிலைய துறை சார்பிலும் சுமார் 200 கோடி செலவு செய்து இந்த பிரம்மாண்டத்தை உருவாக்கி உள்ளனர்.புதிய கலையரங்கம், அன்னதான கூடம், நாழிக்கிணறு பாதை, ஏராளமான விடுதிகள் மட்டுமல்லாமல் பக்தர்கள் ஆங்காங்கே



இளைப்பாற ஏராளமான படிக்கட்டுகள் என பல வசதிகள் .. அமைக்கப்பட்டு உள்ளன.கடல் அரிப்பை தடுக்க பாறைகளை கடலில் கொட்டி விரிவுபடுத்தி உள்ளனர். கோவிலுக்குள்ளேயும் கற்கோயில் கட்டப்படும் போது எப்படி இருந்ததோ அதேபோல் மாற்றி இருக்கிறார்கள். குடமுழுக்கு புண்ணியத்தில் திருச்செந்தூர் கோவில் செல்லும் சாலைகள் புதிதாக போடப்பட்டுள்ளன. இவ்வளவு சீரும் சிறப்புமாக செய்யப்பட்டு உள்ள ஏற்பாடுகளை குடமுழுக்கு நடந்த பிறகும் பக்தர்களும் அறநிலையத்துறை அதிகாரிகளும் பராமரித்து பாதுகாக்க வேண்டும்.

என ஆன்மிகவாதிகள் கருத்து தெரிவித்தனர். குடமுழுக்கு விழாவை ஒட்டி கோவிலில் யாக சாலை பூஜை தொடங்கி நடந்து வருகிறது அதைக் காண ஏராளமான பக்தர்கள் வந்தவண்ணம் உள்ளனர்.







Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725